சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – 8,997 சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களை தொகுப்பூதியத்தின் அடிப்படையில் (Consolidated Pay) நிரப்புதல் – அரசாணை வெளியிடப்பட்டது – திருத்தம் – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை.

அரசாணை (நிலை) எண். 33

நாள் 13.03.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
குரோதி, மாசி 29

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை, நாள் 18.08.2010.
2. அரசாணை (நிலை) எண்.28, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந4–2) துறை, நாள் 05.09.2020.
3. சமூக நல ஆணையரின் கடித ந.க. எண்.18769/சஉதி1(3)/2023, நாள் 10.07.2024.
4. அரசாணை (நிலை) எண்.95, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை, நாள் 16.12.2024.
5. நீதிப்பேராணை மனு (M.D) மனு எண்.2237/2025–ல் பல்வகை மனு (M.D) எண்.1606/2025–ல் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கிய இடைக்கால தடையாணை, நாள் 28.01.2025.
6. அரசாணை (நிலை) எண்.02, மாற்றுத் திறனாளிகள் நலத் (DAP–3(2)) துறை, நாள் 18.02.2025.
7. அரசாணை (நிலை) எண்.32, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை, நாள் 12.03.2025.

------

ஆணை:–

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் காலியாக உள்ள மொத்த சமையல் உதவியாளர் பணியிடங்களில், 8997 சமையல் உதவியாளர் பணியிடங்களை மட்டும் மாதம் ரூ.3000/– வீதம் தொகுப்பூதியத்தில் நிரப்பிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட உயர் நீதிமன்ற

Padasalai.Net

இடைக்கால ஆணையில், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 3, v–ல் இறுதியிலுள்ள "சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு மாற்றுத் திறனாளிகளை நியமனம் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதற்கு" இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2. இந்நிலையில், அரசாணை (நிலை) எண்.95, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை, நாள் 16.12.2024–க்கு பின்வருமாறு திருத்தங்கள் வெளியிடப்படுகிறது:–

<u>திருத்தங்கள்</u>

(i). மேற்குறிப்பிட்ட அரசாணையின் பத்தி 3, ii–ல் உள்ள "தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்களுள், 12 மாதங்கள் திருப்திகரமாக பணியினை முடிக்கும் தகுதியான பணியாளர்களுக்கு, சிறப்பு காலமுறை ஊதியம் (சிறப்பு கால முறை ஊதிய ((STS) நிலை–1 (ரூ.3000–9000)) வழங்கப்பட வேண்டும்" என்கிற சொற்றொடருக்குப் பதிலாக, "**இவ்வாறு தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு கால பணிக்குப்பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 (Level of Pay –ரூ.3000–9000)) ஊதியம் வழங்கப்பட வேண்டும்** " என்ற சொற்றொடர் சேர்க்கப்படுகிறது.

(ii). மேற்குறிப்பிட்ட அரசாணையின் பத்தி 3, v–ல் இறுதியிலுள்ள "சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு மாற்றுத் திறனாளிகளை நியமனம் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது" என்ற சொற்றொடர் நீக்கம் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக, மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.32, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை, நாள் 12.03.2025–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையினைப் பின்பற்றி **சமையல் உதவியாளர் பதவிக்கான நேரடி நியமனத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படவேண்டும்**" என்ற சொற்றொடர் சேர்க்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.

Padasalai.Net

மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் - மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை-9.
நிதித் (ச.ந.)/(வ.செ.பொது-I/II/ வ.வ.-I/மை.ம.ஆ.பி) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/03/2025

பிரிவு அலுவலர்
13/3/25

Padasalai.Net